திருப்பூரின் தொழில் வளர்ச்சிக்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்கும்

ஜவுளித்துறை செயலாளர் உறுதி

▶ திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கே.எம். சுப்பிரமணியம் திருப்பூர் தொழில் துறை சார்ந்த கோரிக்கைகளை தமிழ்நாடு அரசின் ஜவுளித்துறை செயலாளர் அமுதவல்லி மற்றும் ஜவுளித்துறை இயக்குனர் லலிதா ஆகியோரிடம் வழங்கினார்.

திருப்பூர்,அக்.25: திருப்பூர் ஏற்றுமதியாளர்களை சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை பெறும் வகையில் தமிழ்நாடு அரசின் கைத்தறி கைவினைப் பொருட்கள், ஜவுளி மற்றும் காதி துறையின் செயலாளர் அமுதவல்லி மற்றும் ஜவுளித்துறை இயக்குனர் லலிதா ஆகியோர் நேற்று திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத்திற்கு வந்திருந்தனர். சங்கத்தின் தலைவர் கே.எம்.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திருக்குமரன், இணைச்செயலாளர் சின்னச்சாமி மற்றும் குமார் துரைசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் பேசுகையில்,

''பிரதமரின் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு என்று கோட்பாட்டிற்கு மிக சரியான உதாரணம் திருப்பூரும், திருப்பூரில் உற்பத்தி செய்யக்கூடிய பின்னலாடைகளும்தான். தற்சமயம் உலக சந்தை திருப்பூருக்கு சாதகமாக இருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக கடந்த செப்டம்பர் மாதத்திற்கான ஏற்றுமதி கடந்த ஆண்டின் இதே மாதத்தைவிட 17 % வளர்ச்சி அடைந்துள்ளது. மேலும் பின்னலாடைகள் ஏற்றுமதி ஆகஸ்ட் 2024ல் சுமார் 22% வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் குறைந்தபட்சம் 15 சதவீத வளர்ச்சி பதிவாகும் என நம்பிக்கை உள்ளது. அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் மிகக் கடுமையாகவளம்குன்றாவளர்ச்சி உற்பத்தி கோட்பாடுகளை கடுமையாககடைப்பிடித்து வருகின்றன. இதனை ஏற்கனவே திருப்பூர் தொழில் துறையினர் பின்பற்றி வருகின்றனர்.

சமீப காலமாக பிராண்ட் திருப்பூர் என்ற முறையில் வளம் குன்றா வளர்ச்சிகோட்பாடுகளை கடைபிடித்து பசுமை ஆடைகளை உற்பத்திசெய்வதிலும் கவனம் செலுத்தி வருகிறோம். இதனால் உற்பத்தி செலவில் 30 சதவீதம் மற்ற போட்டி நாடுகளை விட அதிகமாகிறது. இதனை ஈடு கட்டுவதற்கு அரசின் உதவி அவசியம் தேவை. இவ்வாறு தனது கோரிக்கையை முன் வைத்தார். தொடர்ந்து பேசிய ஏற்றுமதியாளர்கள், கடந்த 10 வருடங்களாக திருப்பூர் தொழில்துறை பல்வேறு சவால்களால் புதிய முதலீடுகள் எதுவும் பெரிய அளவில் மேற்கொள்ளப்படவில்லை. அதை சரி செய்யும் வகையில் அரசின் உதவி வேண்டும் என கோரிக்கையை முன் வைத்தனர். மேலும் மின் கட்டணத்தில் சலுகை, தொழிலாளர்களை அழைத்து வரும் வாகனத்திற்கு வரிச்சலுகை, தொழிலாளர் விடுதிகள் கட்டுவதற்கான மானியம் மற்றும் சிறு,குறு நடுத்தர நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் நிலுவையில் இருக்கும் நிதி சலுகைகள் உடனடியாக வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழக அரசின் ஜவுளித்துறை இயக்குனர் லலிதா பேசுகையில்,

"விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக வேலை வாய்ப்பு உருவாக்குவதும், பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்கு வகிக்க கூடியதும் ஜவுளித்துறை. தமிழ்நாடு அரசு வகுத்துக் கொண்டிருக்கும் ஜவுளி கொள்கையில் சேர்ப்பதற்கான திட்டங்கள் பற்றி தொழில் முனைவோருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்'' என்று தெரிவித்தார்.

தமிழக அரசின் ஜவுளித் துறை செயலாளர் அமுதவல்லி பேசுகையில்,

"தமிழக அரசு 2030ல் ஒரு ட்ரில்லியன் வர்த்தகம் என்ற இலக்கை வைத்துள்ளது. இதை அடைவதற்கு ஜவுளித்துறையின் பங்களிப்பு மிக முக்கியம். தற்போதைய விகிதத்தை விட இரண்டு மடங்கு வளர்ச்சி அடைய வேண்டும். ஏற்றுமதியாளர்கள் தெரிவித்த கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும். திருப்பூரின் வளர்ச்சிக்கு அரசு ஆவண செய்யும். தொடர்ந்து, தமிழக அரசு தொழில் முனைவோருடன் ஒன்று சேர்ந்து தொழில் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பை அளிக்கும்'' என்று கூறினார். நிகழ்ச்சியில் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வாலிபரிடம் செல்போன் பறித்த 3 பேர் கைது

திருப்பூர்,அக்.25: உத்திரபிரதேசம் மாநிலத்தை சேர்ந்தவர் சனில் திவாரி (27). இவர், திருப்பூர், பல்லடம் அடுத்த வெங்கிடாபுரம் பகுதியில் தங்கி அங்குள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். இந்நிலையில் நேற்று மதியம் சனில் திவாரி தான் தங்கியிருக்கும் அறைக்கு உணவு இடைவேளைக்கு சென்றார்.

அப்போது ரோட்டில் செல்போன் பேசிய படி நடந்து சென்றுள்ளார். பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்த 3 பேர் சனில் திவாரியை வழிமறித்து அவருடைய செல்போனை பறித்து சென்றனர்.

இதுகுறித்து சனில் திவாரி அளித்த புகாரின் பேரில் பல்லடம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த வழக்கு தொடர்பாக ஊட்டியை சேர்ந்த ஜேம்ஸ் வில்சன்(23), அறிவொளி நகரை சேர்ந்த சிவக்குமார் (25), சூலூரை சேர்ந்த அலெக்ஸ்(28) ஆகியோரை பிடித்து விசாரித்தனர். போலீசார் விசாரணையில் சனில் திவாரியின் செல்போனை பறித்தை ஒப்புக்கொண்டனர். தொடர்ந்து பல்லடம் போலீசார் 3 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

ரயில் தண்டவாள பராமரிப்பு பணி

கோவை - ஈரோடு பயணிகள் ரயில் தாமதம்

பயணிகள் அவதி

திருப்பூர்,அக்.25: திருப்பூர் மாவட்டத்தின் பின்னலாடை உற்பத்தி மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களில் பணிபுரிவதற்காக ஈரோடு, சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் தினந்தோறும் திருப்பூருக்கு வந்து செல்கின்றனர்.

திருப்பூருக்கு உரிய நேரத்தில் வந்து செல்ல ரயில் போக்குவரத்தை பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக ஏராளமான தொழிலாளர்கள் ரயில் சீசன் டிக்கெட் எடுத்து வைத்துள்ளனர். ஈரோடு சேலம் உள்ளிட்ட பகுதிகளைச்சேர்ந்த தொழிலாளர்கள் தினமும் பணி முடித்து மாலை 7:15க்கு கோவையிலிருந்து ஈரோடுக்கு செல்லக்கூடிய சிறப்பு பயணிகள் ரயிலில் ஈரோடு செல்வதும், ஈரோட்டில் இருந்து சேலம் ,சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லக்கூடியவர்கள் ஈரோடு ரயில் நிலையத்திலிருந்து ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் செல்வது வழக்கம்.

நேற்று 7:15 மணிக்கு கோவை ஈரோடு பயணிகள் ரயிலுக்காக திருப்பூர் ரயில் நிலையத்தில் காத்திருந்த தொழிலாளர்கள் 2 மணி நேரத்திற்கு மேலாக ரயில் திருப்பூர் வந்து சேராததால் அவதி அடைந்தனர்.

இது குறித்து ரயில்வே நிலைய அதிகாரிகள் மற்றும் ரயில்வே போலீசாரிடம் கேட்டபோது கோவை வடக்கு ரயில் நிலையத்தில் தண்டவாள பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படுவதன் காரணமாக கோவையிலிருந்து கோவை வடக்கு ரயில் நிலையம் மார்க்கமாக இயக்கப்படும் ரயில்கள் தாமதமாக வரும் எனவும் , உரிய நேரம் தெரிவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனால் 2 மணி நேரத்துக்கு மேலாக காத்திருந்த தொழிலாளர்கள் செய்வதறியாது 9 மணி அளவில் திருப்பூர் ரயில் நிலையம் வந்த நாகர்கோவில் விரைவு ரயிலில் ஏறி ஈரோட்டிற்கு பயணித்தனர். இதன் காரணமாக திருப்பூர் ரயில்வே நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து 2 மணி நேரம் காலதாமதத்திற்கு பிறகு கோவை ஈரோடு பயணிகள் ரயில் திருப்பூர் வந்து சேர்ந்தது.

மடத்துக்குளத்தில்

மகளிர் காவல்நிலையம் அமைக்க வேண்டும்

மார்க்சிஸ்ட் மாநாட்டில் தீர்மானம்

உடுமலை,அக்.25: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மடத்துக்குளம் தாலுகா மாநாடு மடத்துக்குளத்தில் நடைபெற்றது. தாலுகா குழு உறுப்பினர் வீரப்பன் தலைமை வகித்தார்.

இந்த மாநாட்டில் 11பேர் தாலுகா குழு உறுப்பினர்களாகவும்,வடிவேல் தாலுகா செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.மாநாட்டில், மடத்துக்குளம்,கணியூர் மற்றும் சங்கரமநல்லூர் பேரூராட்சியில் ஊராக வேலை திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.கொமரலிங்கம் பேரூராட்சியில் ஊராக வேலை திட்டத்தில் பதிவு செய்த அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும். மடத்துகுளம் ரயில் நிலையத்தில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் அனைத்து பிரிவுகளுக்கும் மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும்.மடத்து குளத்தில் மகளிர் காவல்நிலையம் அமைக்க வேண்டும். கொழுமம், கணியூர் மடத்துக்குளம் பகுதியில் நிரத்தர நெல்கொள்முதல் நிலையம் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் நிர்வாகிகள் ராஜரத்தினம், ராஜகோபால், வடிவேல், ஜெயபால், மதுசூதனன், காந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதல்வர் கோப்பை ஹாக்கி போட்டியில் அரசு பள்ளி மாணவர்கள் சாதனை

▶ ஹாக்கி போட்டியில் பங்கேற்ற பெதப்பம்பட்டி அரசு பள்ளி மாணவர்களை தலைமை ஆசிரியர் பாபு, உடற்கல்வி ஆசிரியர் செந்தில்குமாரவேல் ஆகியோர் பாராட்டினர்.

உடுமலை,அக்.25: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் சென்னையில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை ஹாக்கி போட்டி நடந்தது. இதில், திருப்பூர் மாவட்டம் சார்பில் பெதப்பம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் திருமலைக்குமார்,தருண்குமார்,சந்தோஷ்குமார்,திவாகர்,யோகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்று விளையாடினர்.

சிறப்பாக விளையாடிய மாணவர்களை பள்ளி தலைமை ஆசிரியர் பாபு, உடற்கல்வி ஆசிரியர் செந்தில்குமாரவேல் மற்றும் ஆசிரியர்கள், மேலாண்மை குழுவினர் பாராட்டினர்.

உலக போலியோ ஒழிப்பு தினம் விழிப்புணர்வு வாகன பேரணி

▶ இருசக்கர வாகன பேரணியில் பங்கேற்ற வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

பல்லடம் அக்.25: உலக போலியோ ஒழிப்பு தினத்தை அனுசரிக்கும் விதமாக திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த 10 ரோட்டரி சங்கங்கள் சார்பில் 40 கி.மீ தூரத்திற்கு இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியின் நிறைவு நிகழ்வு பல்லடம் ரெயின்போ ரோட்டரி சங்கத்தின் சார்பில் நடைபெற்றது.

இதில் பல்லடம் நகர் மன்ற தலைவர் கவிதா மணி ராஜேந்திரகுமார், நகர செயலாளர் ராஜேந்திர குமார்,மற்றும் நமது பார்வை மாரத்தான் திட்ட இயக்குனர் சுந்தர்ராஜன்,பல்லடம் ரெயின்போ சங்க தலைவர் மூவேந்தன், நாராயணன்,ஆறுமுக பெருமாள்,கும்மி ஆசிரியர் செல்வகுமார் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். பேரணியில் கலந்து கொண்ட அனைத்து வாகனங்களுக்கும் ரெயின்போ ரோட்டரி சங்கத்தின் சார்பாக எரிபொருள் மற்றும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் அளிக்கப்பட்டது.

அருள்புரம் ஜெயந்தி பள்ளியில் உணவு திருவிழா

பல்லடம்,அக்.24: பல்லடம் அருகே கரைப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட அருள்புரத்தில் உள்ள ஜெயந்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் உணவு திருவிழா நடைபெற்றது.விழாவிற்கு ஜெயந்தி கல்வி நிறுவனங்களின் தலைவர் கிருஷ்ணன் தலைமை வகித்தார்.பள்ளி செயலாளர் கவிதா அருண் உணவு திருவிழாவை தொடங்கிவைத்தார்.பள்ளி முதல்வர் முருகானந்தன் வரவேற்றார்.

இதில் பள்ளி மாணவ - மாணவிகள் பாரம்பரிய உணவுகள்,தேசிய அளவில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்ட உணவு வகைகள், துரித உணவுகள் மற்றும் பால் உணவுகள் போன்ற பல வகையான உணவுகளை காட்சிபடுத்தி வைத்ததோடு பாரம்பரிய உணவு வகைகளின் சிறப்புகளை எடுத்துரைத்தனர்.

முடிவில் மாணவ, மாணவிகள்,ஆசிரியர்கள்,பெற்றோர்கள் உணவு வகைகளை வாழை இலையில் பரிமாறி உட்கொண்டனர்.

ரூ.32 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

▶ மூலனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட பருத்தி மூட்டைகள்.

தாராபுரம்,அக்.25: தாராபுரம் அடுத்த மூலனூர் அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடைபெற்ற பருத்தி ஏலத்தில் திருப்பூர், கரூர், திருச்சி, திண்டுக்கல், கோவை, ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த 179 விவசாயிகள் 1387 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

பருத்தியை கொள்முதல் செய்ய திண்டுக்கல், திருப்பூர், கோவை, ஈரோடு, சேலம் மாவட்டங்களைச் சார்ந்த 10 வியாபாரிகள் கலந்து கொண்டனர்

ஏலத்தில் ஒரு குவிண்டால் பருத்தி அதிகபட்ச விலையாக ரூ.8269க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.6100க்கும், சராசரி விலையாக ரூ.7300க்கும், விற்பனையானது. இதன் படி ரூ.32 லட்சத்து 41 ஆயிரத்து 143க்கு ஏலம் போனது, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பொறுப்பு முதுநிலை செயலாளர் தர்மராஜ், விற்பனைக்குழு கண்காணிப்பாளர் சிவகுமார், ஆகியோர் இத்தகவலை தெரிவித்தனர்

உடுமலை அருகே

ஆடிட்டர் வீட்டின் பூட்டை உடைத்து 25 பவுன் திருடிய 3 பேர் கைது

▶ வீட்டின் பூட்டை உடைத்து நகை திருடிய 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

உடுமலை,அக்.25: உடுமலை பகுதியில் பட்டப் பகலில் வீட்டின் பூட்டை உடைத்து 25 பவுன் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்ற 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

உடுமலையை அடுத்த ஏரிப்பாளையம்,சேகர்புரம் பகுதியைச் சேர்ந்தவர் தண்டபாணி (49). கூட்டுறவு ஆடிட்டர். தற்போது மதுரையில் பணிபுரிந்து வரும் இவர் மருத்துவ விடுப்பில் வீட்டில் இருந்துள்ளார். கடந்த 8ம் தேதி வீட்டை பூட்டி விட்டு திருப்பூர் சென்றார். பின்னர் மதியம் வீடு திரும்பிய போது கதவு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். வீட்டின் உள்ளே பீரோவில் வைத்திருந்த 25 பவுன் தங்க நகை,வெள்ளிக் கொலுசுகள்,அரைஞாண் கொடி ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்த உடுமலை போலீஸ் நிலையத்தில் அவர் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வந்தனர். வீட்டின் அருகே உள்ள கண்காணிப்புக் கேமரா பதிவுகள் மற்றும் செல்போன் சிக்னல்கள் போன்றவற்றை ஆய்வு செய்த போலீசார் நேற்று இக்கொள்ளை வழக்கில் தொடர்புடைய திருச்சி மாவட்டம் உறையூர் பகுதியைச் சேர்ந்த மாரிமுத்து, திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் பகுதியைச் சேர்ந்த சத்யராஜ் (24),திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி பதூர் பாங்கரை பகுதியைச் சேர்ந்த முருகானந்தம் (45) ஆகிய 3 பேரை கைது செய்தனர். இவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை போலீசார் மீட்டனர்.

இடையர்பாளையத்தில்

பகுதி நேர ரேஷன் கடை அமைத்து தர கோரிக்கை

பல்லடம்,அக்.25: பல்லடம் அருகேயுள்ள பருவாய் ஊராட்சி இடையர்பாளையத்தில் பல்நோக்கு மைய கட்டடத்தில் பகுதி நேர ரேஷன் கடை அமைத்து தர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பருவாய் ஊராட்சி தலைவர் ரவிச்சந்திரன்,துணைத்தலைவர் மனோன்மணி ரவி ஆகியோர் கூறுகையில்:

பருவாய் ஊராட்சி இடையர்பாளையத்தில் கோவை எம்.பி.நடராஜன் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.8.50 லட்சம் மதிப்பில் பல்நோக்கு மைய கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. வி.கார்டன்,திருப்பதி கார்டன்,சரவண கார்டன்,இடையர்பாளையம் உள்ளிட்ட பகுதியில் 250 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அவர்கள் 2 கி.மீ. தூரம் கடந்து வந்து பருவாய் கிராமத்தில் உள்ள ரேஷன் கடையில் பொருட்கள் வாங்கி செல்கின்றனர். அவர்களின் நலன் கருதி மாவட்ட நிர்வாகம் இடையர்பாளையத்தில் உள்ள பல்நோக்கு மைய கட்டடத்தில் பகுதி நேர ரேஷன் கடை அமைத்து தர வேண்டும் என்றனர்.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) இன் கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின் -ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 11–11–2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 11–11–2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 09–11–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட சுருக்கமான விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமின்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
5.	TCHHL08060001001334 78 & TCHIN08060 0010013406 7	திரு.திருமலைசாமி V திருமதி.ரேவதி R	21.11.2023 தேதியின்படி, கடன் கணக்கு எண். TCHHL08060001003347 8இன் படி தொகை ரூ. 14,09,632/-(ரூபாய் பதினான்கு லட்சத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று முப்பத்து இரண்டு மட்டும்) மற்றும் கடன் கணக்கு எண். TCHIN08060001001340 67 இன் படி தொகை ரூ.1,41,505/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்தொராயிரத்து ஐந்நூற்று ஐந்து மட்டும்) நிலுவையாக உங்களால் செலுத்தப்பட வேண்டி இருக்கிறது. மொத்தம் ரூ.15,51,137/-(ரூபாய் பதினைந்து லட்சத்து ஐம்பத்து ஒராயிரத்து நூற்று முப்பத்து ஏழு மட்டும்)	Rs. 13,40,000/- (ரூபாய் பதின்மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)	Rs. 1,34,000/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்து நான்காயிரம் மட்டும்)	கையக

அசையா சொத்தின் விவரங்கள்: திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், அவிநாசி சார் பதிவு அலுவலகம், அவிநாசி தாலுகா, ராக்கியாப்பாளையம் கிராமம், காசா எண்.126/1, புஞ்சை ஏக்கர் 2.81 சென்ட், காசா.335/1, புஞ்சை ஏக்கர் 0.033/4 மொத்தம் பரப்பளவு புஞ்சை ஏக்கர் 2.85 ¼ சென்ட் கோயம்புத்தூர் மண்டலம் நகரமைப்பு திட்ட அதிகாரி Ma.Va/Na.Vu எண்.63/2019 இன் கீழ் திருமுருகன்பூண்டி சிறப்பு கிரேடு முனிசிபாலிட்டி, Na.Ka.எண்.705/2017, தேதி.27.03.2020 இல் வழங்கப்பட்டுள்ள ஒப்புதலின்படி நிலம் வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டு ஸ்ரீனிவாசா அவென்யூவாக என்ற பெயரில் உள்ளது. அதில் 800 ச.அடி பரப்பளவு உள்ள வீட்டு மனை எண்.26 பின் வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது; மேற்கு: மனை எண்.25, கிழக்கு: மனை எண். 27, தெற்கு: 23 அடி அகல மனை சாலை, வடக்கு: மனை எண்.39. மேலே குறிப்பிட்ட எல்லைகளில் அளவீடு: கிழக்கு – மேற்கு இருபுறமும் 20 அடி, தெற்கு வடக்கு இருபுறமும் 40 அடி, மொத்தம் பரப்பளவு 800 ச.அடி, அத்துடன் பொதுவான பாதை வழி , பொதுசாலை, பொது உரிமைகள் உள்ளிட்டவை.

6.	TCHHL08 36000100 256617 & TCHIN08 36000100 257541	திரு.சுரேஷ் வெள்ளைச்சாமி திரு.வெள்ளைச்சாமி R திரு.ரமேஷ் வெள்ளைச்சாமி திருமதி.மதலையம்மாள் வெள்ளைச்சாமி	ஒப்பந்த எண். TCHHL08360001002566 17 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 25,14,466/- மற்றும் ஒப்பந்த எண். TCHIN08360001002575 41இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.2,00,804/- மொத்தம் ரூ.27,15,270/- & 16-04-2024	Rs. 25,75,000/- (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்)	Rs. 2,57,500/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐந்நூறு மட்டும்)	கையக

அசையா சொத்தின் விவரங்கள்: திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், அவிநாசி எஸ்ஆர்ஒ, அவிநாசி தாலுகா, வடுகப்பாளையம் கிராமம், காசா எண்.196/1, கிழக்கு பகுதி புஞ்சை ஹெக்டேர் 0.48.5, கிஸ்த் ரூ.3.23, புஞ்சை ஏக்கர் 1.20 சென்ட், காசா எண்.196/2, புஞ்சை ஹெக்டேர் 0.85.5 கிஸ்த் ரூ.2.89 புஞ்சை ஏக்கர் 2.11 சென்ட், காசா எண்.196/3, புஞ்சை ஹெக்டேர் 0.76.0, கிஸ்த் ரூ.2.58, புஞ்சை ஏக்கர் 1.88 சென்ட், காசா எண்.196/4, புஞ்சை ஹெக்டேர் 0.76.0, கிஸ்த் ரூ.2.58, புஞ்சை ஏக்கர் 1.88 சென்ட், காசா எண்.196/5, புஞ்சை ஹெக்டேர் 0.05.0, கிஸ்த் ரூ.0.16, புஞ்சை ஏக்கர் 0.12 சென்ட், இந்த பொது புஞ்சை ஏக்கர் 0.03 சென்ட், புஞ்சை ஹெக்டேர் 0.01.5 நிலம் அண்ணாமலை நீட்ஸ் கார்டன் என்ற பெயரில் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வீட்டு மனை எண்.103 மற்றும் 104 பரப்பளவு 2640 ச.அடி வீட்டு மனை, பின் வரும் எல்லைகள்;
இனம் எண்.–1வீட்டு மனை எண்.103: தெற்கு: 30 அடி அகல கிழக்கு–மேற்கு லேஅவுட் சாலை, வடக்கு: மனை எண்.104, மேற்கு: மனை எண்.136, கிழக்கு: 24 அடி தெற்கு வடக்கு லேஅவுட் சாலை, மேற்குறிப்பிட்ட எல்லைகளில், தெற்கு–வடக்கில் கிழக்கு பகுதி 24 அடி, தெற்கு–வடக்கு மேற்குப் பகுதி 24 அடி, கிழக்கு–மேற்கு வடக்குப் பகுதி 55 அடி, கிழக்கு மேற்கு தெற்குப் பகுதி 55அடி. மொத்தப் பரப்பளவு 1320 ச.அடி வீட்டு மனை.
இனம் எண்.2 வீட்டு மனை எண்.104: தெற்கு: மனை எண்.103, வடக்கு: மனை எண்.105, மேற்கு: மனை எண்.135, கிழக்கு: 24 அடி தெற்கு வடக்கு லேஅவுட் சாலை, மேற்குறிப்பிட்ட எல்லைகளில், தெற்கு–வடக்கில் கிழக்கு பகுதி 24 அடி, தெற்கு–வடக்கு மேற்குப் பகுதி 24 அடி, கிழக்கு–மேற்கு வடக்குப் பகுதி 55 அடி, கிழக்கு மேற்கு தெற்குப் பகுதி 55அடி. மொத்தப் பரப்பளவு 1320 ச.அடி வீட்டு மனை. இனம் எண்.–1 1320 ச.அடி வீட்டு மனை இனம் எண்.2–1320 ச.அடி வீட்டு மனை. மொத்தப் பரப்பளவு 2640 ச.அடி.இந்த 824 மாடி கட்டடம், அனைத்து அறைகள், கதவுகள், கதவு பொருத்துதல்கள், மின்னணு பொருத்துதல்கள், மின் இணைப்பு, இத்துடன் பொதுவான பாதை வழி, பொதுசாலை, பொதுவான உரிமைகள் உள்ளிட்டவை உள்ளன. வடுகப்பாளையம் பஞ்சாயத்து, அண்ணாமலை கார்டன் ராயகவுண்டன் புதூர். கதவு எண்.4/318(9))

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் தங்